**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**ஆறாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF – LINE WRITTEN EXAMINATION)**

**மே, சூன் – 2014**

**D041 மொழி வரலாறு –2**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

**(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)**

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. குகைக் கல்வெட்டுகள் எந்த எழுத்தில் எழுதப்பட்டன?
2. வடமொழி இலக்கணத்தைத் தழுவித் தமிழ்மொழிக்கு இலக்கணம் வகுத்த நூல் எது?
3. நான்கு, ஐந்து என்ற சொற்களின் வடிவங்கள் தேவாரத்தில் எவ்வாறு மாறி வழங்குகின்றன?
4. தற்காலத் தமிழில் குறிப்பிடத்தக்க எழுத்துச் சீர்திருத்தம் செய்த பெருமைக்கு உரியவர் யார்?
5. தொல்காப்பியர் குறிப்பிடும் தன்மை ஒருமைப் பெயர் எது?
6. அஃறிணைப் பன்மைக்கு மட்டும் உரியதாகத் தொல்காப்பியர் குறிப்பிடும் விகுதி எது?

7. 'சொல்லுருபு' என்ற சொல்லாட்சியை முதன்முதலில் கையாண்ட இலக்கண நூல் எது?
8. தற்காலத்தில் 'விடு' என்னும் துணைவினை என்ன பொருளைத் தருகிறது?
9. சொற்பொருளை மேலைநாட்டினர் எத்தனை வகைப்பாட்டுள் வகைப்படுத்துகின்றனர்?
10. 'கேழல்' என்ற பழஞ்சொல் எந்த விலங்கினைக் குறிக்கும்?
11. 'மல்லல்' என்னும் உரிச்சொல் தொல்காப்பியர் காலத்தில் என்ன பொருளை உணர்த்தியது?
12. 'கவலை' என்னும் சொல் உணர்த்தி வந்த இரு பொருள்கள் யாவை?
13. இகர ஒலி எகர ஒலியாக ஒலிக்கப்படுவதற்கு ஏதேனும் ஒரு சான்று தருக.
14. சங்க இலக்கியத்தில் 'கௌவை' என்ற சொல் வேறு எவ்வாறு எழுதப்பட்டது?
15. மொழியியலார் குறிப்பிடும் வெடிப்பொலிகள் யாவை?

**பிரிவு – 2**

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. சகர மெய் மொழி முதலில் வருவது குறித்துத் தொல்காப்பியர் கூறிய விதியினின்று சங்க இலக்கியம் மாறுபடுவதை விளக்குக.
2. வீரமாமுனிவர் செய்த எழுத்துச் சீர்திருத்தம் பற்றி எழுதுக.
3. பதிலிடு பெயர் என்றால் என்ன என்பதைச் சான்றுடன் விளக்கிக் காட்டுக.
4. சங்க காலத்தில் 'கொண்டு', 'உடன்' என்னும் சொல்லுருபுகள் உணர்த்திய வேற்றுமைப் பொருள் பற்றி எழுதுக.
5. ஆகுபெயர் பல பொருள் குறிக்கும் ஒரு சொல் ஆதலைச் சான்றுடன் விளக்குக.
6. உயிர் ஒலி முக்கோணம் – வரைபடம் தந்து விளக்குக.
7. தமிழிலக்கண நூலாரின் மெய்யொலிப் பாகுபாடு பற்றிக் கூறுக.
8. யகர மெய் உடம்படுமெய்யாக வரும் சூழலைச் சான்றுடன் விளக்குக.

**பிரிவு – 3**

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) புணர்ச்சியில் நிகழும் சொல்லியல் மாற்றங்களைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) காலந்தோறும் 'கள்' என்னும் பன்மை விகுதியின் பயன்பாட்டில் நிகழ்ந்து வந்துள்ள மாற்றங்களை விவரிக்க.

2. (அ) பெயரடையின் வளர்ச்சி வரலாறு பற்றிக் கூறப்படும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழ் மொழியில் நிகழ்ந்த சொற்பொருள் மாற்ற வகைகளைச் சான்று காட்டி விளக்குக.

3. (அ) தமிழில் இடம்பெற்றுள்ள கூட்டொலிகள் பற்றிய இருவேறு கருத்துகளை இலக்கண, இலக்கியச் சான்றுகள் தந்து விளக்குக.

(அல்லது)

(ஆ) ஒலி மாற்றங்களை மொழியியலார் பல்வேறு வகைப்படுத்திக் காட்டுவதை விளக்குக.